சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.No. 329 /2019

பெயர்: வைரப்பெருமாள் - ம.சா.1 05.10.2023

2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த விபத்து இரண்டு இருச்சக்கர வாகனங்கள் மோதி ஏற்பட்டது. இந்த விபத்து சம்பந்தமாக பசுபதி பாளையம் காவல் நிலையத்தில் என்மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள். அதன் பிறகு குற்ற இறுதியறிக்கை போலீசார் என்மீது தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த விபத்து சம்பந்தமான என்மீதான குற்ற வழக்கு கரூர் நீதிமன்றத்தில் நடந்து வருகிறது என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் ஆஜராகி வருகிறேன். இந்த விபத்து சம்பந்தமாக நான் என் மீது தவறு இல்லைஎன்று புகார் எதுவும் கொடுக்கவில்லை. நான் ஓட்டிச் சென்ற இருச்சக்கர வாகனத்திற்கு காப்பீடு இருந்தது. எனது இருச்சக்கர வாகனம் கரூரில் யுனைடட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனியில் காப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனது இன்சூரன்ஸ் கம்பெனியில் மனு கொடுத்து எனக்கு ஏற்பட்டஇழப்பீடை சரிசெய்து கொள்ள முடியும் என்றால்சரிதான்.

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒம் / வைரப்பெருமாள்

ஒம்/ சண்முக கனி,
சார்பு நீதிபதி,
குளித்தலை.